**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**OS. 41/2023**

நாள்.19.01.2026

**வா.சா.1. 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

தாவா சொத்து உதயமார்தாண்டபுரம் கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தின் சர்வே எண். 27. தாவா சொத்து அரசுக்கு சொந்தமான சொத்து என்று சொன்னால் சரிதான். ஆனால் என்னுடைய அனுபவத்தில் உள்ளது. தாவா சொத்திற்கு அருகில் பல்வேறு நபர்கள் அரசுக்கு சொந்தமான சொத்துக்களை ஆக்கிரமிப்பு செய்து குடியிருப்பு , கடை கட்டிடங்கள் கட்டி, அனுபவம் செய்து வந்தார்கள் என்று சொன்னால் சரிதான். தாவா சொத்து மற்றும் அதன் அருகில் உள்ள சொத்துக்கள் அனைத்தும் நீர்நிலை மற்றும் சாலை வகைப்பாடுடையது என்று சொன்னால் சரிதான். நீர்நிலைப்பகுதி ஆக்கிரமிப்பு, சாலை ஆக்கிரமிப்பு செய்து கட்டிடம் கட்டியுள்ளதால் அதை அகற்ற வேண்டுமென பொதுமக்கள் மற்றும் பல்வேறு பொது நல அமைப்புகள் அரசுக்கு கோரிக்கை வைத்துள்ளார்கள் என்று சொன்னால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்திற்கு எங்கள் பெயரில் அரசு ஆவணங்கள் ஏதேனும் ஏற்படுத்தி கொடுத்துள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்திற்கு பட்டா வழங்க கோரி என் தந்தை அரசுக்கு மனு கொடுத்து நாளது தேதி வரை பட்டா ஏதும் வழங்கவில்லை. தாவா சொத்து உட்பட பக்கத்தில் உள்ள

ஆக்கிரமிப்பு பகுதிகளை அகற்ற கோரி வருவாய்துறை மூலமாக எங்களுக்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டதா என்றால் என் தந்தை பெயருக்கு 24.04.2018–ல் அறிவிப்பு வந்தது. ஆனால் என் தந்தை 23.04.2007–ல் இறந்து விட்டார். அரசு தாவா சொத்தை பொருத்து கொடுத்த அறிவிப்பிற்க்கு பதில் அறிவிப்பு கொடுத்தேனா என்றால் பதில் அறிவிப்பு கொடுத்துதான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். 2014–ம் ஆண்டிற்கு முன்பும், பின்பும் அரசு தரப்பு எங்களுக்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. பொதுமக்கள் தரப்பில் நீர்நிலை ஆக்கிரமிப்புகளை அகற்ற கோரி தாகீர் என்பவர் மாண்புமை சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளாரா என்றால் அது போன்று எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை. நான் சென்னை உயர் நீதிமன்றத்தில் நீர்நிலையில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற கோரி நான் வழக்கு தாக்கல் செய்திருந்தேன். இந்த வழக்கில் எனது அனுபவத்தில் இருந்த சொத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை மட்டும் அகற்றி விட்டதாகவும், மற்ற நபர்கள் ஆக்கிரமித்திருந்த சொத்தினை அகற்ற வில்லை எனக்கூறி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அந்த வழக்கு 2020–ல் முடித்து வைக்கப்பட்டது. அரசுக்கு சொந்தமான நீர்நிலைப்பகுதிகள் மற்றும் சாலை ஓரத்தில் ஆக்கிரமிப்பு செய்து குடியிருப்பவர்களை வருவாய் துறை மற்றும் பொதுப்பணிதுறை அதிகாரிகளுடன்

தாவா சொத்து உட்பட ஆக்கிரமிப்புகள் அனைத்தும் மாண்புமிகு உயர்நீதிமன்ற உத்தரவுப்படி கடந்த 2020–ல் அகற்றப்பட்டு விட்டது என்று சொன்னால் சரியல்ல. எனது அனுபவத்தில் உள்ள புல எண். 26–ல் ஒரு பகுதியை மட்டும் 06.07.2018–ல் வருவாய்த்துறை மற்றும் பொதுப்பணிதுறை அதிகாரியால் ஆக்கிரமிப்புகளை அகற்றி விட்டார்கள். நான் சொல்வது போல் தாவா சொத்து உட்பட அனைத்து ஆக்கிரமிப்புகளையும் அரசு அதிகாரிகளால் அகற்றப்படவில்லை என சொல்வது சரியல்ல. தாவா சொத்தில் உள்ள கட்டிடங்கள் மற்றும் ஆக்கிரமிப்புகளை அரசால் அகற்றிவிட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் ஆக்கிரமிப்புகள் அகற்றுவதற்கு முன்பு உள்ள ஆவணங்கள் என்றால் சரிதான். தாவா சொத்தில் எந்தவிதமான கட்டிடங்கள் இல்லாத காரணத்தினால் தான் அரசால் எனது பெயரில் எந்த ரசீதியும் வழங்கப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தை நான் அனுபவ உரிமையை வாங்கியதாக சொல்வது தவறு என்று சொன்னால் சரியல்ல. அரசுக்கு சொந்தமான சொத்தை தனிநபர் வாங்க உரிமையில்லை என்று சொன்னால் சரியல்ல. அரசுக்கு சொந்தமான நீர்நிலை மற்றும் சாலை பகுதிகளை ஆக்கிரமிப்பு செய்வது சட்டப்படி தவறு என்று சொன்னால் சரியல்ல. அரசுக்கு சொந்தமான சொத்தினை ஆக்கிரமிப்பு

செய்திருந்தால் அந்த சொத்துக்கள் அரசுக்கு தேவைப்படும் பட்சத்தில் திரும்ப கொடுக்க மறுக்க முடியாது என்று சொன்னால் சரியல்ல. அரசுக்கு சொந்தமான தாவா சொத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற கோரி முறைப்படி அறிவிப்பு கொடுத்தப்பிறகு தான் அகற்றப்பட்டது என்று சொன்னால் புல எண். 26–ல் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றிவிட்டார்கள். புல எண். 27–ல் பாதி கடை கட்டிடம் உள்ளது. புல எண். 27–ல் கடை கட்டிடம் இருப்பது குறித்து எந்த ஆவணத்தையும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. முறையாக அறிவிப்பு கொடுத்தும், அளந்தும் ஆக்கிரமிப்புகளை அரசால் அகற்றப்ட்டு விட்டது என்று சொன்னால் சரியல்ல. நீர்நிலை பகுதிகளை ஆக்கிரமிப்பு செய்ய கூடாது என உயர்நீதிமன்ற உத்தரவின்படி அனைத்து நீர்நிலை பகுதியில் உள்ள ஆக்கிரமிப்புகளை வருவாய்துறை மூலமாக அகற்றப்பட்டுவிட்டது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் கட்டிடங்கள் ஏதும் இல்லாததால் அதனை அகற்ற கூடாது என உறுத்துக்கட்டளை பரிகாரம் எனக்கு கிடைக்ககூடியதல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் பொய்யான வழக்கு மூலத்தின் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் தள்ளுபடி செய்யக் கூடியது என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:– இல்லை.</u>**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.